ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1838/26 - 2013 නොවැම්බර් මස 27 වැනි බදාදා - 2013.11.27

*1838/26 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**தெங்கு வளர்த்தல் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழில் செயலகம்,
கொழும்பு 5,
2013, நவெம்பர் 21.

**அட்டவணை**

தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9971 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதிய 1748/ 14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான தீர்மானங்கள், பின்வருமாறு மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

(1) அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் வேலையாட்களுக்கு ஏற்புடையதான துண்டு வேலைக்கான ஆகக்குறைந்த சம்பளம் பின்வருமாறமைத்தல் வேண்டும்.

| இல. | நடைமுறை | | வீதம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|
| (1) | பெருந்தோட்டப் பயிர்களை வளர்ப்பதிலும் பேணுவதிலும், தேங்காய்களைப் பறித்தல் | - | 1,000 மரங்களுக்கு | 1,655.00 |
| (2) | கொப்பறாவை உற்பத்தி செய்வதில் தேங்காய்களை உரித்தல், உடைத்தல், கொப்பறா பதனிடலும், வேறாக்கலும் | - | 1,000 தேங்காய் களுக்கு | 485.00 |

பகுதி III

(2) நடைமுறை:

(அ) தெங்குப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையினை வளர்த்தலும், பேணுதலும் ;

(ஆ) கொப்பறாவினை உற்பத்தி செய்தல் .

மேற்படி நடைமுறைக்கேற்ப நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறமைய வேண்டும் :

| | | ரூபா சதம் |
|---|---|---|
| அனைத்து வேலை ஆட்களுக்கு | - நாளொன்றுக்கு | 415. 00 |

சாதாரண வேலை நாளொன்றில் அத்தகைய வேலைக்காக வழங்குவதற்குக் குறிக்கப்பட்ட ஆகக்குறைந்த சம்பள வீதத்தில் ஒன்றரை மடங்கு, ஞாயிற்றுக்கிழமையில் கால்நடை பராமரிப்பில் ஈடுபட்டுள்ள எந்தத் தொழிலாளிக்காயினும் இப்பகுதியில் குறிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு மாறுபடாத வகையில் வழங்கப்படுதல் வேண்டும்.

பகுதி III "அ"

(3) (அ) நடத்துநர் ஒருவரின் வேலைக்கு ;
(ஆ) காவலாளி ஒருவரின் வேலைக்கு.

உரிய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம் :

| இல. | ஏக்கர் அளவு | | காவலாளி ரூபா சதம் | நடத்துநர் ரூபா சதம் |
|---|---|---|---|---|
| (1) | பரப்பளவில் 10 ஏக்கருக்குக் குறையாத ஆனால் 25 ஏக்கருக் குக் குறைந்த தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் ஏதேனும் பிரிவு | - | 9,520.00 | ஏற்புடையதன்று |
| (2) | பரப்பளவில் 25 ஏக்கருக்குக் குறையாத ஆனால் 50 ஏக்கருக் குக் குறைந்த ஏதேனும் தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு | - | 9,935.00 | 10,210.00 |
| (3) | பரப்பளவில் 50 ஏக்கருக்குக் கூடிய தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு | - | 11,385.00 | 11,660.00 |

12- 482

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.